ஆனால் ஒருவர் மட்டுமே இருக்கின்றார். அவர்கூட நிரந்தரமாக பணியாற்றுவதில்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அதேபோல் மாவட்ட மருத்துவமனைகள், ஆகியவற்றில் மருத்துவர்களை நியமிக்கவேண்டுமென்பதற்காக இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,322 மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இப்போது இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களை நியமிப்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். இன்னும் குறைந்தது 20 நாட்களுக்குள்ளாக எந்தெந்த மருத்துவமனைகளில் மருத்துவர்கள் சேரவில்லையோ, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தரவு இடப்பட்டிருக்கின்றது. ஆகவே உங்களுடைய அந்தத் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் ஒருவர்தான் இருப்பதாகச் சொன்னீர்கள். அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அந்த மருத்துவர் பணியில் அமராவிட்டால் அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள்

(பட்டியல்கள் 15 முதல் 18 வரை) @

(இ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 19) @@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

@ 163 முதல் 623 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@@ 624 முதல் 705 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.